அசல்

4.5.42. P. Hussain Meer.

அசல் -1 பக்-

வாழ்க தமிழ்மொழி.

# தமிழ் இலக்கிய மன்றம்

உத்தமபாளையம்.

தலைவர்:- சோ. தியாகராஜ முதலியார்.
உபதலைவர்கள்:- பண்டித வித்துவான் தி. சங்குப்புலவர்.
கா. சி. முகமது இஸ்மாயில்.
அமைச்சர்கள்:- வித்துவான் சி. இராமசாமி.
உ. பீ. உசேன்மீர்.
பொருளாளர்:- ரா. வேதகிரிநரசிம்ம ஐயர்.

உத்தமபாளையம்,
(மதுரை ஜில்லா.)
தேனி S. I. RY.

தேதி 4 - 5 - 42.
இடம் உத்தமபாளையம்.

ஐயா!

இன்று 4-5-42 வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு திரு ரா. வேதகிரிநரசிம்ம ஐயர் தலைமையின் கீழ் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் காலஞ்சென்றமை குறித்துக் கூடிய தமிழ் இலக்கிய மன்றத்தின் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் தலைவரால் பிரரேபிக்கப்பட்டு கூட்டத்தினர் யாவராலும் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம்:—

தாய்மொழியாம் தமிழ்மொழிக்குத் தொண்[டு] புரிவதே தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக்கொண்[டு] நாடெங்கணும் அலைந்து திரிந்து செல்லரித்து சிதை[ந்]தொழியும் நிலையிலிருந்த சங்க இலக்கிய இலக்கணங்களாகிய பழந்தமிழ் ஏட்டுச் சுவடிகளைத் தேடி எடுத்[துத்] திருத்தி அச்சியற்றி தமிழ் மக்களுக்கு என்றென்று[ம்] அழியாத பெருஞ்செல்வமாகத் திரட்டி உதவி என்[று]ம் பொன்றும் புகழுடம்பை நிலைநிறுத்திய தாக்ஷிணாத்[ய] கலாநிதி திராவிட வித்தியா பூஷணம் மகாமகோபா[த்]யாய டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் [...] ஞான்று இறைவன் திருவடிநீழல் அடைந்தது [...] இம்மன்றம் ஆழ்ந்த துயர்க்கடலில் மூழ்கி வரு[ந்து]கின்றது. அன்னாரது ஆன்மா அமைதியடையுமா[று] இறைவனை இறைஞ்சுவதுடன் அன்னவரின் குடும்பத்[தி]னர்க்கும் தமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

தங்கள் அன்பிற்குரிய

P. Hussain Meer.

4-5-42.

அசல்

4.5.42. P. Hussain Meer.

அசல் -1 கவர் -

வாழிய செந்தமிழ்!

வாழ்க நற்றமிழர்!!

# தமிழ் இலக்கிய மன்றம்,

உத்தமபாளையம்,

(மதுரை ஜில்லா.)

திருவாளர்

V.S. கல்யாணசுந்தரமெய்யர் B.A., B.L. அவர்கள்

~~'தியாகராஜவிலாசம்'~~

145 Sannadhi St

~~திருவட்டீஸ்வரன்பேட்டை~~

~~சென்னை~~.

Tirukalikundram

(46)

அசல்

4.5.42. P. Hussain Meer.

அசல் -1 நகல் -

✓

